பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 27

திங்கட்கிழமை
23 டிசெம்பர் 2024

மார்கழி 08 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

தேர்தலுக்கு முன்னர் நியமனம் தருக
» 03

# நிறைவேற்று அதிகார முறைமை புதிய அரசியலமைப்பு ஊடாக நீக்கம்



## தேர்தல் அறிக்கையில் கூறியவற்றை நிறைவேற்றுவோம் என்கிறார் விஜித ஹேரத்

**கொழும்பு, டிசெம்பர் 23**

புதிய அரசியலமைப்பின் ஊடாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத். ☞ 11

## கிணற்றில் தவறி வீழ்ந்து மூதாட்டி சாவு

கொடிகாமம், டிசெ.23
கிணற்றுக்குள் தவறி வீழ்ந்து வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை நாவற்குழியில் நடந்துள்ளது. ☞ 11

## தொடர் கொலைகள்; இரகசியத் திட்டம்!

கொழும்பு, டிசெ.23
அடுத்துவரும் நாள்களில் 19 கொலைகளை மேற்கொள்வதற்கு பாதாள உலகக் குழுக்கள் திட்டமிட்டுள்ளன என்றும். ☞ 11

## புலிகளின் தலைவர் பிரபாவை வாழ்த்தியவருக்கு விசாரணை

வவுனியா, டிசெ.23
தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனுக்கு இரு ஆண்டுகளுக்கு முன்னர் சமூகவலைத்தளத்தில் வாழ்த்துப் பதிவு செய்தவரிடம் தற்போது பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.
இரு ஆண்டுகளுக்கு ☞ 11



## இலங்கை - இந்தியா பாலம் ஏற்புடைய யோசனை அல்ல!

### பிவித்ரு ஹெல உறுமய போர்க்கொடி

கொழும்பு, டிசெ.23
இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையேயான பாலம் அமைக்கும் யோசனை நாட்டின் தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை உட்பட பல விடயங்களுக்கு அச்சுறுத்தலாக இருக்கும். எனவே அதனை நடைமுறைப்படுத்தக்கூடாது என்று பிவித்ரு ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
இதுதொடர்பாக அவர் மேலும் தெரி ☞ 11

## தேர்தல் திருத்த சட்டவரைவு 7ஆம் திகதி நாடாளுமன்றில்

கொழும்பு, டிசெ.23
உள்ளாட்சிசபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு எதிர்வரும் 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது என தெரிய வருகின்றது.
2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது நாடாளுமன்றக் கூட்டத் ☞ 11

## உள்ளூராட்சித் தேர்தல் மார்ச் 29 ஆம் திகதி?

கொழும்பு, டிசெ.23
உள்ளூராட்சி சபைத் தேர்தலை அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 22ஆம் திகதி அல்லது 29ஆம் திகதி நடத்துவது தொடர்பாக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.
2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் ☞ 11

## சீனாவுடன் பேசும் விடயங்களை வெளிப்படுத்த வேண்டும் அநுர!

### வலியுறுத்துகின்றது ஐ.ம.ச.

கொழும்பு, டிசெ.23
சீனப் பயணத்தில் அந்த நாட்டுடன் பேச்சு நடத்துவதற்கு திட்டமிட்டுள்ள விடயங்களை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் நாட்டு மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது. ☞ 11

பருத்தித்துறை - பொன்னாலை

# வீதியை சீரமைக்கக்கோரி பொதுமக்கள் நேற்றுப் போர்



முச்சந்தி முரளி

‘எப்பவோ போட்ட வாழ்த்துக்கு இப்ப விசாரிக்கிறவைக்கு விசரோ?’




யாழ்ப்பாணம், டிசெ.23
பருத்தித்துறை - பொன்னாலை வீதியைச் சீரமைக்கக்கோரி வல்வெட்டித்துறையில் நேற்று உணவுத் தவிர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், பொதுமக்களிடம் கையெழுத்தும் சேகரிக்கப்பட்டது.
‘எமது வீதி எமக்கானது. புதிய அரசே புது வீதி அமைத்துத் தா’, ‘ஓட்டுக்காக வீடு வந்தவரே வந்த வீதியை மறந்தது ஏன்?’ போன்ற வாசகங்கள் அடங்கிய ☞ 11

காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்

## மயங்கி வீழ்ந்து நேற்று உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ.23
4 நாள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
யாழ்ப்பாணம், கோண்டாவிலைச் சேர்ந்த கந்தசாமி குணரட்ணம் (வயது-67) என்ற குடும்பஸ்தரே உயிரிழந்தவராவார். ☞ 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாதத்தைத் தூண்டும் சாணக்கியன் எம்.பி.!

## குற்றஞ்சாட்டுகிறார் சுமணரத்ன தேரர்

கொழும்பு, டிசெ.23

**கிழக்கில் வாழும் சிங்கள மக்களைத் தூண்டும் வகையிலும், இனவாதத்தைப் பரப்பும் விதத்திலுமே சாணக்கியன் நாடாளுமன்றத்தில் உரையாற்றிவருகின்றார் என்று அம்பிட்டிய சுமணரத்ன தேரர் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பில் இராசமாணிக்கம் சாணக்கியன் நாடாளுமன்றத்தில் கதைக்கின்றாரா? இல்லை. மாறாக சிங்கள மக்கள் வாழும் பகுதியை தமது நிலப்பகுதியாக மாற்றிக்கொள்வது பற்றியே கதைத்துவருகின்றார். அப்பாவி தமிழ் மக்கள் வாழும் கிராமங்கள், அவர்களுக்குரிய வீதிப்பிரச்சினை உள்ளிட்ட விடயங்கள் பற்றி அவர் கதைப்பதை நாம் எப்போதும் கண்டதில்லை. மயிலத்தமடு, திவுலபதான உட்பட சிங்களக் குடும்பங்கள் வாழும் பகுதியை பற்றியே பேசுகின்றார். வாழ்வாதாரம் பற்றிப் பேசவில்லை. மாறாக சிங்கள மக்கள் வாழ்வது தமது தாயகத்துக்கு பொருத்தமற்ற செயல் என்பதையே காட்டுவதற்கு விளைகின்றார். சிங்கள மக்களைத் தூண்டும் வகையிலும், விரட்டுவதை இலக்காகக்கொண்டே கதைக்கின்றார். இனவாதத்தைப் பரப்புகின்றார். நாட்டை முன்னேற்றுவது பற்றி கதைப்பதில்லை - என்றார். (எ-44)



# சுயசரிதை எழுதும் ரணில்

கொழும்பு, டிசெ. 23

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் வாழ்க்கை தொடர்பான சுயசரிதையொன்றை எழுதும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார்.

1973 ஆம் ஆண்டு கம்பஹா மாவட்டத்தின் பியகம தொகுதியின் ஐக்கிய தேசியக் கட்சி அமைப்பாளராக ரணில் விக்ரமசிங்க, தனது அரசியல் செயற்பாடுகளை ஆரம்பித்தார்.

கடந்த 50 ஆண்டுகால அரசியல் வரலாற்றில் நாடாளுமன்றத்தின் சபாநாயகர் பதவி தவிர்ந்த நாடாளுமன்றத்தின் ஏனைய அனைத்துப் பதவிகளையும் அவர் வகித்துள்ளார்.

ஜனாதிபதிப் பதவியில் இருந்து ஓய்வுபெற்ற பின்னர் தற்போது சர்வதேச அரசியல் மற்றும் பொருளாதார சொற்பொழிவாளராக அவர் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார். இந்த நிலையில் தனது கடந்த 50 வருடகால அரசியல் வாழ்க்கை குறித்த சுயசரிதையொன்றை எழுதும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. (ச-இ)

# இறக்குமதி வாகனங்கள் அரசால் சட்டவிதிமுறை

கொழும்பு, டிசெ. 23

இறக்குமதி செய்யப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேல் விற்காமல் வைத்திருக்கும் வாகனங்களுக்கு அபராதம் விதிக்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

கடந்த 18ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் படி, முதல் கட்ட வாகன இறக்குமதி தாராளமயமாக்கப்பட்டுள்ளது.

அதன்படி சுங்க ஆவணங்களை சமர்ப்பித்த 90 நாள்களுக்குள் நுகர்வோருக்காக இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்களைப் பதிவு செய்வதற்கு வாகன இறக்குமதியாளர்கள் பொறுப்பேற்க வேண்டும்.

இல்லையெனில் வாகனங்களின் காப்பீட்டு மதிப்பில் 3 சதவீதம் மாதாந்திர அபராதம் விதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# ஜனவரி மத்தியில் அநுர சீனாவுக்கு

கொழும்பு, டிசெ. 23

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க எதிர்வரும் ஜனவரி நடுப்பகுதியில் சீனாவுக்குச் செல்லவுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

நீண்டகாலமாகத் தாமதமாகி வந்த வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பை முடித்த சில நாள்களின் பின்னர் இந்தப் பயணம் இடம்பெறவுள்ளது. இலங்கையின் இருதரப்புக் கடனில் அரைவாசிக்கு மேல் சீனாவிடம் பெற்றுக்கொண்ட கடனாகும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். (ச-இ)

# செல்வம் எம்.பி. பிரதமருடன் சந்திப்பு

கொழும்பு,டிசெ.23

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவருமான செல்வம் அடைக்கலநாதனுக்கும், பிரதமர் ஹரிணி அமரசூரியவுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பிரதமரின் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர், தலைமன்னார் பகுதியில் இராணுவம் பொலிஸ் மற்றும் கடற்படையினரால் கையகப்படுத்தியுள்ள மக்கள் காணிகள், பொது இடங்கள், ஆலயங்களுக்குச் சொந்தமான காணிகளில் இருந்து அரசபடைகள் வெளியேறி மக்களது பாவனைக்காக வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். அத்துடன் ஐயப்ப பக்தர்களின் பயண ஒழுங்குகளை இலகுவாக்குவதற்கான நடவடிக்கையையும் எடுக்கவேண்டும் என்றும் செல்வம் அடைக்கலநாதன் கேட்டுக்கொண்டார். (ச-56)



# 2025 ஆம் ஆண்டில் 26 விடுமுறைகள்

கொழும்பு,டிசெ.23

2025 ஆம் ஆண்டுக்காக 26 பொது விடுமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் மாதத்தில் அதிகபட்சமாக 4 விடுமுறை நாள்கள் காணப்படுகின்றன. ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி சித்திரைப் புத்தாண்டு கொண்டாடப்படுவதோடு வெசாக் பௌர்ணமி 12 ஆம் திகதி மற்றும் நத்தார் பண்டிகை டிசெம்பர் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கொண்டாடப்படுகின்றன. (ச-இ)

# கொழும்புக்கு சீனக்கப்பல்

கொழும்பு, டிசெ. 23

'ஆர்க் பீஸ்' எனப்படும் சீனக் கடற்படையின் மருத்துவக் கப்பல் நேற்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பல் இலங்கை மக்களுக்கு மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை சேவைகளை வழங்குவதற்காக எதிர்வரும் 27ஆம் திகதி வரை கொழும்புத் துறைமுகத்தில் நங்கூரமிட்டு தரித்து நிற்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# கணக்கறிக்கை சமர்ப்பிக்காத வேட்பாளர்கள் பட்டியல் பொலிஸாரிடம்

கொழும்பு, டிசெ. 23

நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான செலவின அறிக்கைகளை வழங்காத வேட்பாளர்களின் பெயர்களைப் பொலிஸாரிடம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் எல்பிட்டிய உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் செலவு அறிக்கையை வழங்காத வேட்பாளர்களின் பெயர்கள் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு அது தொடர்பான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தேர்தலுக்கு முன்னர் நியமனம் தராவிட்டால் போராட்டம்!

## வடக்கு- கிழக்கு உள்வாரி பட்டதாரிகள் எச்சரிக்கை

**யாழ்ப்பாணம், டிசெ.23**

**இலங்கையில் அதிஉயர் இசட் புள்ளிகளை பெற்ற உள்வாரி பட்டதாரிகளுக்கு தேர்தலின் முன் அரச வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும். இல்லையெனில் நாடளாவியரீதியில் போராட்டம் முன்னெடுக்கப்படும் என வடக்கு - கிழக்கு உள்வாரி பட்டதாரிகள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.**

இதுதொடர்பில் யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அதன் தலைவர் ஸ்ரீஸ்கந்தராஜா சர்வகியன் தெரிவிக்கையில்,
வடக்கில் உள்வாரிப் பட்டதாரிகள் 2500 மேற்பட்டவர்கள் காணப்படுகின்றனர் . கடந்த 2021 ஆம் ஆண்டு நியமனம் அரசினால் வழங்கப்பட்டது . அதில் 2014 ஆம் ஆண்டு உயர்தர மாணவர்ளுக்கு அதாவது 2020 / 2021 பட்டம் பெற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. தேசிய கல்வியியற் கல்லூரிக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் எம்மை விட குறைந்தளவான இசட் புள்ளிகளுடன் உள்ளீர்க்கப்பட்டு பின்னர் நியமனத்துடன் வெளியேறுகின்றார்கள்.
வடக்கிலே சிங்கள மொழி இரண்டாம் மொழி கற்கைநெறிக்கான ஆசிரியர் வெற்றிடம் உள்ளது. திணைக்களங்களில் மாகாணசபையின் கீழே மொழிபெயர்ப்பாளர்களுக்கு வெற்றிடம் உள்ளது. அரசாங்கம் 35000 பட்டதாரிகளை உள்ளீர்ப்பதாகக் கூறிய போதும் இதுவரை நடவடிக்கைகளை முன்னெடுக்கவில்லை.
ஆகவே ஏப்ரல் மாதம் உள்ளூராட்சித் தேர்தல் முன்னெடுக்கப்படவுள்ளது. தேர்தலுக்கு முன்னர் 2020/2021 வெளியேறிய உள்வாரிப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமையளித்து வேலைவாய்ப்பு வழங்கப்படவேண்டும். தொடர்ந்து எம்முடன் எந்த வித பேச்சுகளையும் அரசு மேற்கொள்ளாதுவிடின் வடக்கு - கிழக்கு தழுவிய பட்டதாரிகள் இணைந்து போராட்டத்தில் குதிப்போம்- என்றார். (ச-125)

இவ்வாண்டு

## வீதி விபத்துகளால் 2,243 பேர் பலி

யாழ்ப்பாணம், டிசெ.23
இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் டிசெம்பர் 13ஆம் திகதி வரை வீதி விபத்துகளில் 2,243 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
கடந்த 24 மணி நேரத்தில், பல பகுதிகளில் நடந்த சாலை விபத்துகளில் இரண்டு இளைஞர்கள் உட்பட 13 பேர் உயிரிழந்துள்ள பின்னணியில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இதேவேளை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வீதி விபத்துகளில் எட்டுப் பேர் உயிரிழந்துள்ளதுடன் 62 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)




## கொலையாளி சுட்டுக்கொலை

கொழும்பு, டிசெ. 23
இலங்கையில் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய நபர் மர்ம நபர்களால் நேற்றுமுன்தினம் காலியில் வைத்து சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.
தடல்ல பிரதேசத்தில் பெண் ஒருவருடன் மோட்டார் சைக்கிளில் பயணித்தபோதே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.
கொலை செய்யப்பட்ட நபர், காலி, மெலேகொட பகுதியைச் சேர்ந்த 5 கொலைகள் மற்றும் போதைப் பொருள் கடத்தல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

வவுனியாவில்

## விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.23
வவுனியாவில் விபசாரத்தில் ஈடுபட்ட 3 பெண்கள் நேற்று கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட மது ஒழிப்புப் பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.
வவுனியா மாவட்ட மது ஒழிப்பு பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து மேற்கொண்ட திடீர் சோதனையின் போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். மேலதிக விசாரணை களின் பின் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-18)




சாமி வரம் குடுத்தாலும் பூசாரிகள் இடம் குடுக்க மாட்டினம். அதுதான் இப்பவும் இஞ்ச தொடர்ந்து நடக்குது. வவுனியா வடக்கில இருக்கிற சில ரீச்சர்மார் சில வருசத்துக்கு முதல், 'ட்ரெயினிங் கொலிஜ்' (ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை) முடிச்சிட்டு வெளியேறினவை. அவை எல்லாருக்குமே அம்பது வயதுக்கும் மேல இருக்கும். அவையை சொந்த இடங்களில வேலைக்குப் போடுறதுக்கு அப்ப இருந்த திணைக்கள அதிகாரிமாருக்கு ஏதோ பிடிப்பில்லை. அப்பிடியே கொத்தா எல்லாரையும் தூக்கி மடுப்பக்கமா வேலை செய்யச் சொல்லி ஓர்டர் போட்டிட்டினம்.

உண்மையில வவுனியா வடக்கு எண்டது பேரில மட்டும் தான் வவுனியாவை வைச்சிருக்குது. அதுக்கும் வவுனியாவுக்கும் கனதூரம். அங்க இருந்து முல்லைத்தீவுதான் கிட்ட. அதோட அடிப்படை வசதியளும் குறைஞ்ச இடம், வேற இடத்து ரீச்சர்மார் வவுனியா வடக்குக்கு படிப்பிக்கப் போறதெண்டால் பஞ்சிப்படுவினம். அதால அங்க இப்பவும் கனபள்ளிக்கூடங்களில ரீச்சர்மாருக்குத் தட்டுப்பாடுதான். அதால இப்பிடி 'ட்ரெயினிங் கொலிஜ்' முடிச்சுப்போட்டு போனவையை அங்க வேலைசெய்யவிடாமல், எதுக்கு மடுவுக்கு போட்டவை எண்டது அந்த அதிகாரிமாருக்குத்தான் வெளிச்சம். எவ்வளவு நாளைக்குத்தான் அந்த ரீச்சர்மாரும் மூண்டு பஸ் பிடிச்சு, ஏழெட்டு மணித்தியாலம் பயணப்பட்டு போய் படிப்பிக்க ஏலும்? தங்களை வவுனியா வடக்கில எங்கையாவது ஒரு பள்ளிக்கூடத்துக்கு மாத்துங்கோ எண்டு அவையும் போடாத கடிதமில்லை, பார்க்காத எம்.பி.யுமில்லை, கெஞ்சாத அதிகாரியளுமில்லை. ஆனால் ஒருத்தரும் ஒண்டும் செய்யேலை.

கடைசியா இப்ப வவுனியாவில திசைகாட்டியில நிண்டு வெண்ட எம்.பி. ஒராள் இவையின்ர சோகக் கதையைக் கேட்டிட்டு, தன்னால ஏதும் செய்ய முடியுமோ எண்டு பார்த்திருக்கிறார். இது நிர்வாகம் சம்பந்தப்பட்ட விசயமெண்டதால அவையளை, வடக்குக்கு 'நாயகமா' இருக்கிறவரிட்ட அனுப்பி இருக்கிறார். அவரும் இவையின்ர கோரிக்கையில உள்ள நியாயத்தைப் பார்த்திட்டு, 'சாதகமா ஏதும் செய்து குடுங்கோ' எண்டு மாகாணப்பணிப்பாளருக்கு எழுத்துமூலம் ஒரு சிபார்சு எழுதி, இவையை அங்க அனுப்பி இருக்கிறார். இந்த ரீச்சர்மார் மாகாண ஒப்பீஸுக்குப் போகேக்க பணிப்பாளர் அங்க இல்லை. அதால இவை தங்கட கோரிக்கைக் கடிதத்தை அங்க குடுத்திட்டு வந்திட்டினம். அதுக்குப் பிறகு ஒப்பீஸுக்கு வந்த பணிப்பாளர், இவையின்ர கடிதத்தைப் பார்த்திட்டு, சம்பந்தப்பட்ட ரீச்சர்மாருக்கு போன் எடுத்திருக்கிறார். 'ஏதோ விடிவுகாலம் வந்திட்டு' எண்டு அவரின்ர போனை எடுத்துக் கதைச்சிருக்கினம். பணிப்பாளர் போனில ஒரு புருஸ்லீயா மாறி, அவையை பாய்ஞ்சு கடிக்காத குறையா உங்களுக்கு அங்க போய் படிப்பிக்க ஏலாட்டி அங்கத்த பிள்ளையளை ஒரு வாகனம் பிடிச்சு உங்கட வீட்டையோ அனுப்பிறது? வேணுமெண்டா வேலையை விட்டிட்டுப் போங்கோ. இடமாற்றம் தரேலாது எண்டு கத்திப்போட்டு வைச்சிட்டாராம். பென்சன் எடுக்க இன்னும் நாலைஞ்சு வருசம் தான் இருக்குது அந்த ரீச்சர்மாருக்கு. இந்த வயதிலை அவையள் இவ்வளவு தூரம் பஸ்ஸில போனால், ஒழுங்காப் படிப்பிக்கிற மனநிலையும் இருக்காது. அவையின்ர சொந்த இடத்திலையும் ரீச்சர்மார் தட்டுப்பாடு. அப்பிடியிருந்தும் ஏன் இவையை இப்பிடி திணைக்களக்காரர் ஆத்தலைய வைக்கினம் எண்டதுதான் ஒருத்தருக்கும் விளங்கேலை.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகவும் பரபரப்பாகவும் காணப்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்ட நாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. இன்று குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்க்கவும். சிலருக்கு குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடும் வாய்ப்பு ஏற்படும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கடகம்:** எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் விலகும். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள். சுப நிகழ்ச்சிகளுக்கான பேச்சு வார்த்தை சாதகமாக முடியும்.

**சிம்மம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். உணவு மற்றும் தண்ணீர் விஷயத்தில் சற்று கவனம் தேவை. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகக்கூடும்.

**கன்னி:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். உணவு மற்றும் தண்ணீர் விஷயத்தில் சற்று கவனம் தேவை. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களை வாங்கும் யோகம் உண்டாகக்கூடும்.

**துலாம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக் கூடும். மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம்:** எடுத்த காரியம் அனுகூலமாக முடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சி சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுடன் திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும்.

**தனுசு:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும் பாதிப்பு எதுவும் இருக்காது.

**மகரம்:** உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும். தாய்வழி உறவினர்களிடம் எதிர்பார்த்த காரியம் முடிவதில் இழுபறியாகும்.

**கும்பம்:** இன்று சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கித் தருவீர்கள்.

**மீனம்:** அனுகூலமான நாளாக இருக்கும்.அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். சிலருக்கு எதிர்பாராத பணவரவும் உண்டு.

# திருமுறைகளை யானைகளில் எடுத்துவந்து மார்கழிப் பெருவிழா

யாழ்ப்பாணம்,டிசெ.23

வரலாற்றுச் சிறப்புமிக்க வண்ணை வைத்தீஸ்வரன் ஆலயத்திலிருந்து 12 திருமுறை திருவடிகள் இரண்டு யானைகளில் நகர்வலமாக எடுத்துவரப்பட்டு மார்கழிப்பெருவிழா யாழ். கலாசார நிலையத்தில் நாளை மறுதினம் புதன் கிழமை சிறப்புற இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் முனைவர் தஞ்சாவூர் பல்கலைக் கழக இணைப் பேராசிரியர் கொ. ப . நல்லசிவம்,செந்தமிழ் வேள்வி வித்தகர் பழனிச்சாமி குமாரலிங்கம் மற்றும் சிவத்திரு சிறீ பிரசாந்தன் வளவாளர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர். அருளாளர்களாக பழனி ஆதீனம் தவத்திரு சாது சண்முக அடிகளார்,சிவகுரு ஆதீன குரு முதல்வர் வேலன் சுவாமிகளும் பிரதம விருந்தினராக ஆளுநர் வேதநாயகன், சிறப்பு விருந்தினராக துணைவேந்தர் சிறிசற்குணராஜா , வடமாகாணத்தின் பிரதம செயலாளர் இளங்கோவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளார்கள். செந்தமிழ் சொல்லருவி லலீசன் தலைமையில் பட்டிமன்றம் இடம்பெறவுள்ளது. வெளி மாவட்டத்திலிருந்து வருபவர்களுக்கு போக்குவரத்து ஏற்பாடு உணவு வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் மதிய போசனமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மார்கழிப் பெருவிழாவைக் கண்டுகளிப்புற அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தென்னாடு செந்தமிழ் ஆகம சிவத்தமிழ் சைவ மாணவர் சபை பொதுச் செயலாளர் ஜீவா சஜீவன் அழைப்பு விடுத்துள்ளார். (ச-125)



# தேங்கிய வெள்ளத்தால் போக்குவரத்துப் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 23

இத்தாவில் வேம்போடுகேணி வீரபத்திரர் ஆலயத்தைச் சூழ்ந்து வெள்ளம் காணப்படுவதால் அந்தப் பகுதியூடான வீதியால் பயணிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது என்று மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பகுதிக்கு புகையிரதக் கடவை இல்லாமையால் இந்திராபுரம் மக்கள் குறித்த ஆலய வீதியையே பயன்படுத்துகின்றனர். எனவே குறித்த வீதியில் தேங்கியுள்ள வெள்ளத்தை வெளியேற்ற பச்சிலைப்பள்ளி பிரதேசசபையும் பிரதேச செயலகமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தப்பகுதி மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச-25, 9)



# வீதியோரத்தில் வீசப்பட்ட குளிர்பானப் போத்தல்கள்!

யாழ்ப்பாணம், டிசெ. 23

வடமராட்சி முள்ளிப் பகுதியில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட குளிர்பானப்போத்தல்கள் வீதியோரத்தில் கொட்டப்பட்டதால் அந்தப் பகுதி மக்கள் பெரும் அசௌகரியத்தை சந்தித்துள்ளனர்.

துன்னாலை - வல்லிபுராழ்வார் ஆலயத்துக்குச் செல்லும் வீதியிலேயே அவை வீசப்பட்டுள்ளன. இந்தப் பகுதியில் வீதியோரமாக பாதுகாப்பற்ற முறையில் தனியார் பலரும் கழிவுகளைக் கொட்டுவதால் வீதியால் பயணிக்க முடியாதவாறு துர்நாற்றம் வீசுவதுடன் டெங்கு நுளம்புகள் உற்பத்தியாகும் அபாயகரமான இடமாகவும் மாறிவருகிறது. எனவே உரிய அதிகாரிகள் இதுதொடர்பில் கவனம் செலுத்தி சுகாதாரச் சீர்கேட்டைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். (ச-22,100)

# குமார் பொன்னம்பலம் நினைவேந்தல் நிகழ்வு

யாழ்ப்பாணம்,டிசெ.23

தமிழ் மக்களது உரிமைக்காகக் குரல்கொடுத்தமைக்காக படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் 25 ஆவது நினைவேந்தல் நிகழ்வு எதிர்வரும் ஜனவரி மாதம் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பிரதான வீதி மடத்தடியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

நினைவேந்தல் நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (ச-33-159)

26 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

"ஆண்டவரின் இல்லத்தில் என் வாழ்நாள் எல்லாம் நான் குடியிருக்க வேண்டும்" (தி.பா.27:4)



அமரர் நாகமுத்து சின்னத்துரை - J.P

மலர்வு 28.02.1927

உதிர்வு 24.12.1998

அன்பின் பிறப்பிடமாய் பண்பின் உறைவிடமாய்
அன்புக்கு இலக்கணமாய் வாழ்வின் வழிகாட்டியாய் வாழ்ந்து
எம் வாழ்வில் ஒளியேற்றிய எம் அன்பு ஐயாவே!
நீர் இறைவனுடன் இன்புற்றிருக்க வேண்டுகின்றோம்.

ஞானப்பிரகாசர் வீதி,
மல்வம், உடுவில்.

பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(cs 56986) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

நம்பிக்கை,ஒழுக்கம்,வீரியம்,சித்தம்,நடுவுடமை,தர்மத்தை ஆராய்ந்து தெளிதல்,அறவு,நற்பயிற்சிகள்,சிந்தனை ஒருமிப்பு – இவற்றில் பரிபூரண நிறைவு பெற்றால் துன்பங்களை விரட்டி விடலாம்.

– கௌதம புத்தர் –

## தமிழரசுக்கு ஏன் இந்த நிலை

அறிவியல் ஆராய்ச்சிகளில் 'கட்டுப்பாட்டுப் பரிசோதனை' என்றொரு முறையுண்டு. ஒரேவிதமான இரண்டு மாதிரிகள் ஆய்வுக்குள்ளாக்கப்படும். ஏதேனும் ஒரேயொரு விடயம் மட்டும் இந்த இரண்டிலும் வேறுபட்டதாக இருக்கும். ஆய்வின் முடிவில் கிடைக்கும் பெறுபேற்றுக்கு குறித்த விடயமே காரணியென நிறுவுதலே இந்தக் கட்டுப்பாட்டுப் பரிசோதனையின் நோக்கம். அதேபோன்று வெவ்வேறு மொழிகளைச் சேர்ந்த ஒன்றுக்கும் மேற்பட்ட ஆக்க இலக்கியகர்த்தாக்களின் படைப்புகளை ஒப்பீடு செய்து ஆராயும் ஒப்பீட்டு இலக்கியம் என்னும் ஆய்வுமுறை இலக்கிய உலகில் உண்டு. இப்படி ஒன்றோடு ஒன்று ஒப்பிட்டுக்கொள்ளல் சுயபரிசோதனைக்கும், தவறுகளை இனங்கண்டு முன்னேறுவதற்கும் உதவும். அப்படி ஒரு ஒப்பீட்டை வெளிப்படுத்தும் வகையில் அண்மையில் படித்த ஒரு சமூகவலைத்தளப்பதிவை இங்கு பகிர்வது பொருத்தமாக இருக்கும்.

*'டிசெம்பர் 18 ஆம் திகதி தமிழரசுக்கட்சி தோற்றம் பெற்று 75 வருடம் பூர்த்தியாகியதால், அதையொட்டி வழக்கம் போல தந்தை செல்வாவின் சிலைக்கு மாலை அணிவித்ததோடு தன் பவளவிழாவை மட்டுப்படுத்தியிருந்தது தமிழரசுக் கட்சி. ஒரு காலத்தில் தமிழர்களின் மத்தியில் செல்வாக்குப் பெற்றிருந்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி, மலையகத் தமிழரின் குடியுரிமையைப் பறித்த இலங்கை குடியுரிமைச் சட்டத்தை ஏற்றுக் கொண்டதால் உண்டான கருத்து வேறுபாடுகளால், எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசிலிருந்து வெளியேறிய அணியினரால், டிசெம்பர் 1949 இல் யாழ்ப்பாணம், மாவிட்டபுரத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி உருவாக்கப்பட்டது.*


*இலங்கையில் எப்படி தமிழ்க்காங்கிரஸில் இருந்து பிரிந்து தமிழரசுக் கட்சி உருவானதோ அதே 1949 ஆம் ஆண்டில் தான், இந்தியாவின் தமிழகத்தில் பெரியாரின் திராவிடர் கழகத்தில் இருந்து அறிஞர் சி. அண்ணாத்துரை தலைமையிலான குழுவினரால் திராவிட முன்னேற்றக்கழகம் தொடங்கப்பட்டது. எனவே தமிழரசுக் கட்சிக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும் வயது ஒன்றுதான். இரண்டுமே 75 வருட அரசியல் அனுபவத்தைக் கொண்ட பழம்பெரும் கட்சிகள்தான். ஆனால் தமிழரசுக் கட்சி மிகக்குறுகிய காலத்திலேயே தமிழர் தாயகத்தின் பெரும்பான்மையைப் பெற்ற கட்சியாக உருவெடுத்தது. 1956 ஆம் ஆண்டு தேர்தலிலேயே அந்தக் கட்சி கணிசமான ஆசனங்களைக் கைப்பற்றி, தன் செல்வாக்கை தமிழர் பகுதிகளில் நிலைநிறுத்தியது. ஆனால் தி.மு.க.வின் பயணம் அப்படியல்ல, முதலில் தேர்தலைப் புறக்கணித்த அந்தக்கட்சி பின்னர் படிப்படியான சிறுவெற்றிகளைப் பெற்று, 1967 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலிலேயே தமிழகத்தின் ஆட்சியைப் பிடிக்கமுடிந்தது. அதன் பின்னர் தி.மு.க. இன்றுவரை தமிழகத்தில் மட்டுமல்லாது இந்தியாவினதும் தலைவிதியையே தீர்மானிக்குமளவுக்கு அதீத வளர்ச்சியை எட்டியுள்ளது. தமிழரசுக் கட்சியே பிரிவுகளாலும், உடைவுகளாலும், பதவிஆசை கொண்டோரின் சூழ்ச்சிகளாலும் கவிழத் தொடங்கியுள்ளது.*

*இந்தநிலைக்கு மிகமுக்கியமான காரணம், கட்சியின் கட்டமைப்பைப் பேணுவதில் உள்ள வித்தியாசமே. என்னதான் குடும்ப ஆட்சியின் உறைவிடம் என தி.மு.க.வை பலரும் விமர்சித்தாலும், அந்தக் குடும்ப உள்நுழைப்பைக்கூட யாப்பின் படியே செய்கின்றனர். கட்சியின் கடைநிலை உறுப்பினராகச் சேர்வோர் பலகாலம் கட்சிக்காக உழைத்த பின்னரே வட்டச் செயலர், தொகுதிச் செயலர், மாவட்டச்செயலர் என முன்னேறியே தமது இடத்தையும், பதவிகளையும் உறுதிசெய்ய முடியும். ஆனால் தமிழரசுக் கட்சியில் உறுப்பினராக இல்லாதவர்கள் கூட திடீர் வேட்பாளராகுமளவுக்கு தனிநபர் செல்வாக்கும்,யாப்பு உதாசீனமும் தாராளமாகவே நடந்தன. முன்னாள் முதலமைச்சர் விக்னேஸ்வரன் தொடக்கம் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் களமிறக்கப்பட்ட பெண் வேட்பாளர்கள் வரை பலரும் இவ்விதம் கட்சியின் உறுப்பினர்களாக இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்டவர்களே. இப்படி தன்னிச்சையான தனிநபர் தீர்மானங்கள், கட்சியின் தீர்மானங்களாக திணிக்கப்பட்டதால், தமிழரசுக் கட்சி வீழ்கிறது. இன்னும் யாப்பையும், தொண்டர்களின் உழைப்புக்கே உயர்வை வழங்கும் போக்கையும் இறுக்கமாக பேணுவதால் தி.மு.க. வாழ்கின்றது.'*

**இதுதான் அந்தப் பதிவு.**

**இந்த ஒப்பீட்டை இனியும் உணர்ந்து கொண்டு, தவறுகளைத் திருத்தி,சரியான பாதையில் பயணித்தாலேயே தமிழரசுக்கட்சி எழுச்சி பெறமுடியும். ஆனால் அது நடக்குமா?**

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com



குற்றங்களைத் தடுக்க

## ஒன்பது மாகாணங்களுக்கு விசேட புலனாய்வுப் பிரிவுகள்

**கொழும்பு, டிசெ. 23**

**இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் குற்றச் செயல்களைக் குறைப்பதற்காக மாகாண மட்டத்தில் புதிய விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவுகள் அமைக்கப்படவுள்ளன.**

அவை, பெரிய குற்றங்களை விசாரிக்கும் மற்றும் மாகாண மட்டத்தில் சிறப்பு விசாரணைகளை நடத்தும் பணிகளை நிறைவேற்றும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார். குறித்த பொலிஸ் பிரிவுகளை உருவாக்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

ஒன்பது மாகாண பொலிஸ் பிரிவுகளும் ஒரு மூத்த பிரதிப் பொலிஸ் அதிபரின் மேற்பார்வையின் கீழ் கொண்டு வரப்படவுள்ளன அவரே 9 பிரிவுகளின் ஒட்டுமொத்தப் பொறுப்பாளராக இருப்பார். இந்த பிரிவுகள், முதன்மையாக தீர்க்கப்படாத வழக்குகளைத் தீர்ப்பது, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை ஒடுக்குதல், போதைப்பொருள் கடத்தல் மற்றும் பிற கடுமையான குற்றங்களை எதிர்த்துப் போராடுவதில் கவனம் செலுத்தும்.

இந்தப் பிரிவுகள் 2025 ஜனவரி முதல் செயற்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார். (ச-இ)



## டெங்கு 47,599

கொழும்பு, டிசெ. 23

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 47,599 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதேவேளை இந்தவருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 23 பேர் உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

## 10 நாள்களுக்கு மாத்திரமே இறக்குமதி அரிசி போதும்

யாழ்ப்பாணம், டிசெ.23

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசித் தொகை 10 நாள்களுக்கு மாத்திரமே போதுமாக உள்ளதாக அரிசி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அதன்படி, மேலும் அரிசி இறக்குமதி செய்யப்படவில்லையெனின் அரிசித் தட்டுப்பாடு அதிகரிக்கும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ச-இ)



## இந்தியாவுக்கான இலங்கைத்தூதுவர் பணிக்காலம் நிறைவு

யாழ்ப்பாணம், டிசெ.23

இராஜதந்திர பணிக்காலம் நிறைவடைந்துள்ள நிலையில், இந்தியாவுக்கான இலங்கைத் தூதுவர் ஷேனுகா செனவிரத்ன கொழும்புக்கு அழைக்கப்பட்டுள்ளார். புதிய தூதுவராக ஒருவர் கூடிய விரைவில் டெல்லிக்கு அனுப்பப்படவுள்ளதாகவும் அவர் யார் என்பது குறித்து அரசாங்கம் அறிவிக்கும் எனவும் வெளிவிவகார அமைச்சின் முக்கியஸ்த்தர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## பயிர்ச்செய்கை யாழில் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்.மாவட்டத்தில் ஏற்பட்ட அசாதாரண காலநிலையின் நிமித்தம் ஏற்பட்ட பயிரழிவுகள் தொடர்பில் கடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது.

இதன் பிரகாரம் வெங்காயம் 5.5 ஹெக்ரேயரும் , மரக்கறி பயிர்கள் 138 ஹெக்ரேயரும் மிளகாய் 26.7 ஹெக்ரேயரும் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் 23 ஆயிரத்து 757 வாழைமரங்களும் ,2 ஆயிரத்து 820 பப்பாசி மரங்களும் , 0.4 ஹெக்ரேயர் தானிய வகைகளும், முந்திரி 1.9 ஹெக்ரேயரும் அழிவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-125)

**நாளை** 24.12.2024

செவ்வாய்க்கிழமை - மார்கழி - 09

சுபநேரம் : 10.56 - 12.26
ராகுகாலம் : 03.26 - 04.56

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடக்கிலிருந்து

# பனைசார் உற்பத்தி ஏற்றுமதி ரூ.3500 மில்லியன் எதிர்பார்ப்பு

**யாழ்ப்பாணம், டிசெ. 23**

**அடுத்த ஆண்டு முதல் வடக்கு மாகாணத்திலிருந்து சுமார் 3 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா பெறுமதியான பனை சார் உற்பத்திப் பொருள்களை வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் சகாதேவன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த காலங்களில் பனை அபிவிருத்திச்சபை எதிர் பார்த்த இலக்குகளை அடைய முடியாத சூழ்நிலை ஏற் பட்டது. தற்போது அவற்றை நிவர்த்தி செய்து 2025 ஆம் ஆண்டு முதல் வடக்கிலிருந்து 3,500 மில்லியன் ரூபா வருமானத்தை எதிர்பார்த்து பனை சார் உற்பத்தி பொருள்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற் கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. ஐரோப்பா அமெரிக்கா கனடா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் எமது பனை உற்பத்திகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்பு கள் கிடைக்கும் நிலையில் ஏற்றுமதி மூலம் அதிக இலா பத்தை ஈட்ட முடியும். இலங்கை மொத்தத் தேசிய வரு மானத்துக்கு பங்களிப்புச் செய்யும் வகையில் இந்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன- என்றார். (ச-25-66)



மத்திய கலாசார அலுவல்கள் திணைக்களத்தி னால் 'கலாபூஷணம்' விருது பெற்ற பளை தர்மக்கேணியைச் சேர்ந்த மூத்த கலைஞர் செல்லையா சுந்தரம்பிள்ளையை கௌரவிக் கும் நிகழ்வு தர்மக்கேணி பொது நோக்கு மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தினராக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் இ.த.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக தர்மக் கேணி அ.த.க. பாடசாலை முன்னாள் அதிபர் வே.செல்வக்குமார் ஆகியோர் கலந்துகொண் டனர். (ச-25,9)



## மக்களின் பாவனைக்கு மயானம் கையளிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.23

சுன்னாகம், கொத்தியாலடி இந்து மயானம் புனரமைப்புச் செய்யப்பட்டு மக்கள் பாவனைக் காக மயான நிர்வாகத்தினரிடம் கையளிக்கப் பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதனின் ஐந்து இலட்சம் ரூபா பாதீட்டு நிதியில் குறித்த மயானம் புனரமைப்பு செய்யப்பட்டது. நிகழ்வில் யாழ் . மாநகரசபை யின் முன்னாள் பிரதி முதல்வர் து. ஈசன் கலந்து கொண்டார். (ச-25, 20)




## கலைவிழா

கோப்பாய், டிசெ. 23

கோப்பாய் ரெயின்போ முன்பள்ளி சிறார்க ளின் கலைவிழா, முன் பள்ளி அதிபர் அனுஜா அருள்நேசன் தலை மையில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத் தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடை பெற்றது. நிகழ்வில் முதன்மை விருந்தி னராக கோப்பாய் ஆசி ரியர் கலாசாலை அதி பர் சந்திரமௌலீசன் லலீசன்,சிறப்பு விருந் தி னராக புத்தூர் பஞ்ச சீக வித்தியாலய அதி பர் கவிதா லலீசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,9)




## செம்மணியில் முதலை!

யாழ்ப்பாணம், டிசெ.23

யாழ்ப்பாணம் - செம்மணி வீதியில் காயங்களுடன் முதலை ஒன்று இறந்த நிலையில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மீட்கப்பட்டுள்ளது.

முதலை வீதிக்கு வந்த வேளை வீதியால் சென்ற வாகனம் மோதியதில் முதலை காயமடைந்து இறந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது. இது குறித்து வனஜீவராசிகள் திணைக்களத்துக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் திணைக்க ளத்தின் அதிகாரிகள் முதலையை மீட்டுக் கொண்டு சென்றுள்ளனர். (ச-25, 125)





கொழும்புத்துறையில் இருந்து பண்ணைக் கடற் கரை வரையிலான கடற்கரையோரங்களை துப் புரவு செய்யும்பணி கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இதில் யாழ்.பிரதேச செயலர், மாநகர ஆணை யாளர், காரைநகர் மருத்துவ அதிகாரி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள், டெங்குக் களப் பணி யாளர்கள், சமூக அமைப்புகள் , பொதுமக்கள் பங்கேற்றனர். (ச-25, 17)



கல்வி அமைச்சின் தொழிற்கல்வி பிரிவினால், தேர்ச்சித் தரமதிப்பீட்டாளர்களுக்கான நியமனம் வழங்கும் நிகழ்வு தொழிற்கல்வி அலகின் கேட்போர் கூடத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றது. (ச-25, 9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்ட ஆட்சியை மீட்டெடுப்பதற்கு விரைவான நடவடிக்கை தேவை!

## ஆசிய மனித உரிமை ஆணைக்குழு கோரிக்கை

கொழும்பு, டிசெ.23
சட்டத்தின் ஆட்சியையும் மரியாதையையும் மீட்டெடுக்க விரைவான சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கொள்கை மற்றும் நிகழ்ச் சித் திட்டப் பணிப்பாளர் பஸில் பெர்னாண்டோ எழுத்துமூலம் இது தொடர்பான கோரிக்கையை முன்வைத் துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நாட்டில் சட்ட சீர்திருத்தச் செயற்பாடுகளை முன்னெடுப்பதில் உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டிய முக்கியமான மூன்று விடயங்கள் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்றங்களில் கடுமையான குற்றவியல் வழக்குகளை தினசரி விசாரணை செய்தல், இலஞ்சம் மற்றும் ஊழலைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை அறிமுகம் செய்தல், சட்டமா அதிபர் திணைக்களத்தின் சீர்திருத்தம் ஆகியன இதில் உள்ளடங்குகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)


## நினைவலைகள்

1ஆம் ஆண்டு | 29ஆம் ஆண்டு | 31ஆம் ஆண்டு







மாணிக்கம் அன்னலட்சுமி
தோற்றம் 12.10.1944 மறைவு 03.01.2024

மாணிக்கம் சிவகிருஷ்ணன்
தோற்றம் 13.02.1972 மறைவு 12.09.1995

நீலன் மாணிக்கம்
தோற்றம் 25.09.1934 மறைவு 03.09.1993

அம்மா ஐயா சகோதரனே எத்தனை எத்தனை உறவுகள் இருந்தாலும்
நாம் ஒரு கூட்டில் வாழ்ந்த உறவு போல் ஆகுமா
எங்கள் வாழ்வுக்கு ஒளி வீசும் தீபங்கள் என்றும் நீங்கள் தான்.
நீங்கள் எம்மீது வைத்த பாசத்திற்கு எல்லைதான் உண்டோ.
நாம் உங்களுடன் வாழ்ந்த வாழ்க்கை என்றும் மண்ணில் ஆனந்தமே.
உங்கள் பிரிவு தான் தாங்காமல் தினம் தினம் கண்ணீரில் வாழ்கின்றோம்.
எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் எங்கள் மனதை விட்டு நீங்காது.

ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி !!!

ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.

குடும்பத்தினர்
077 312 6701



## விற்பனைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில் மரக்கறி Market (சந்தைக்கு) முன்பாக 2 பரப்பில் அமைந்த கடைக் கட்டடமும், காணியும், யாழ். ஆஸ்பத் திரி வீதியில் நவீன சந்தைக்கு முன்பாக 32 அடி அகலமும், 216 அடி அகலம் கொண்ட இரண்டு கடைகளும், யாழ். மின்சார நிலைய வீதியில் மலாயன் கபேக்கு அண்மையில் தனிக்கடை ஒன்றும், யாழ். மின்சார நிலைய வீதியில் CTB பஸ் தரிப்பிடத்து பின்பாக இரண்டு கடைகளும் உடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 077 723 2535



## மரண அறிவித்தல்

மலர்வு 30 . 12 . 1956



உதிர்வு 22 . 12 . 2024

### தம்பு தர்மகுலசிங்கம் -J.P

(ஓய்வு பெற்ற பிரதேச சபை உத்தியோகத்தர், சாவகச்சேரி)

கேரதீவு வீதி (A32 வீதி) கோவிலாக்கண்டி, கைதடியைச் சேர்ந்த தம்பு தர்மகுலசிங்கம் அவர்கள் (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு மற்றும் பொன்னம்மா தம்பதியரின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-நாகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், இராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், தர்ஷன் (ஆசிரியர் வ/சின்னடம்பன் பாரதி வித்தியாலயம்), தனோசன், தார்மீகன், ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிவாஞ்சலியின் (ஆசிரியர், யா/ கோப்பாய கிறிஸ்தவ கல்லூரி) பாசமிகு மாமனாரும் தர்மிதன், ஆதிரன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சறோஜினிதேவி, மணிமேகலை, ஆனந்தராசா, மற்றும் மகேந்திரன், இராசகுலசிங்கம், விஜயலக்சுமி (அசிரியர், யா/கோண்டாவில் இந்துக் கல்லூரி), ரங்கநாதன், ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்றவர்களான இலக்குமி, அற்புதமலர், இரவீந்திரன் மற்றும் இராஜேந்திரனின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிணமுருங்கை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

A 32 வீதி,
கோவிலாக்கண்டி,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
077 236 7692

(Cs 56999) V-1



## மரண அறிவித்தல்

தோற்றம் 04 . 01 . 1948



மறைவு 22 . 12 . 2024

### சின்னத்துரை கந்தசாமி

(ஓய்வுநிலை களஞ்சிய பொறுப்பாளர் - நல்லூர் ப.நோ.கூ. சங்கம்)

இணுவில் கிழக்கு சிவகாமி அம்மன் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை கந்தசாமி (ஓய்வுநிலை களஞ்சிய பொறுப்பாளர் - நல்லூர் ப.நோ.கூ. சங்கம்) நேற்று (22.12.2024) ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - அன்னம்மா (கண்மணி) தம்பதியரின் இளைய மகனும், இரத்தினசிங்கம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), நடராசா, குலசிங்கம் (ஓய்வு பெற்ற காணி உத்தியோகத்தர்), லீலாவதி, சிவயோகம், விமலராணி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், தியாகராசா, பத்மராணி மற்றும் பாக்கியலட்சுமி, இரத்தினசிங்கம் ஆகியோரின் மைத்தனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2024) திங்கட்கிழமை சிவகாமி அம்மன் கோவிலடியிலுள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிவகாமி அம்மன் கோவிலடி,
இணுவில் கிழக்கு.

(Cs 56996) N-1

தகவல்:
குடும்பத்தினர்
021 224 2100


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
## இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான
## 3ஆவது மீள்கேள்வி அறிவித்தல் - 2025

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடைகள் 2025ஆம் ஆண்டிற்கு (01.01.2025 -31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்கான 3ஆவது மீள்கேள்விகள் சபையினால் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி | : 23.12.2024 – 30.12.2024 நண்பகல் 12.00 மணிவரை |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி | : 30.12.2024 பி.ப 02.00 மணி வரை |
| கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி | : 30.12.2024 திங்கட்கிழமை பி.ப 02.00 மணி |
| கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் | : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர். |

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் **கேள்வியின் பெயர்** தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் **"தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்"** என்னும் முகவரிக்கு எதிர்வரும் 30.12.2024 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன். உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | | | |
| 1 | அச்சுவேலி ஆட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 5,000.00 | **23,860.00** |
| 2 | வளலாய் கோழி இறைச்சிக்கடை புதிய கட்டிடம் | 1,600.00 | 1,000.00 | 10,000.00 | **253,935.00** |
| | **புத்தூர் உப அலுவலகம்** (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடம்) | | | | |
| 5 | புத்தூர் கோழியிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 25,000.00 | **823,365.00** |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | | | |
| 7 | கோப்பாய் கோழியிறைச்சிக்கடை | 2,250.00 | 1,000.00 | 15,000.00 | **440,154.00** |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.10.26 ஆம் திகதி இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

**தலைவர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**
**2024.12.23**

(CR/43955) N-1

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 28.03.1955 — இறப்பு 10.01.2022

## வீரவாகு இரத்தினசிங்கம்
(கொக்கிளாய் மேற்கு, கொக்கிளாய்)

**திதி: தேய்பிறை அட்டமி**

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும் மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்று
இரண்டு ஆண்டுகள் சென்றாலும்
கண் விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

**கொக்கிளாய் மேற்கு,**
**கொக்கிளாய்.**

(cs 56513) (N-1)

**துயர் பகிர்வோர்**
**மனைவி,**
**பிள்ளைகள்.**

## பதின்மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



**மலர்வு : 22.07.1948** — **உதிர்வு : 23.12.2011**

## அமரர் முருகேசு பாக்கியநாதன் (சொக்கர்)
(உரிமையாளர் - விநாயகர் ரேணிங் வேக்ஸ்)

"நான் நல்லதொரு போராட்டத்தில் ஈடுபட்டேன்
என் ஓட்டத்தை முடித்துவிட்டேன் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.
*(2திமொ 4:7)*

உயிர் தந்து உணவளித்து
தோள்சுமந்து எம்மைக் காத்த தந்தையே
உம்முகம் பார்த்து ஆண்டுகள்
பதின்மூன்று ஆனதையா - ஆனாலும்
நினைவுகளாய் எம்முடன் என்றும் வாழ்கின்றீர்
நித்திய இறைவனோடு சங்கமிக்க
உமக்காக செபிக்கிறோம் எப்போதும்.

**என்றும் உங்கள் உயிருடன் கலந்திருக்கும்**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

**ஞானப்பிரகாசர் வீதி,**
**மல்வம், உடுவில்.**

(cs.56988 (N-1)

## மரண அறிவித்தல்



## தெய்வேந்திரம் கௌரீஸ்வரி (கிளி)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரம் கௌரீஸ்வரி (கிளி) கடந்த 18.12.2024 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - புவனேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லப்பா - பிள்ளையாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற தெய்வேந்திரம் அவர்களின் பாசமிகு மனைவியும், முருகதாஸ், ஜெகதீஸ்வரி, மனோகரன், நாகேஸ்வரி, குலேந்திரன், ஜெயசீலன் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்றவர்களான பராசக்தி, பாலசிங்கம், மகாலட்சுமி மற்றும் திலகவதி, அப்புலிங்கம், இரத்தினபூபதி, கமலாதேவி, மகாலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், மலர்விழி, ஆலாலசுந்தரம், காந்தரூபி, அனுஷிகா, செல்வராசா, நந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், அனோஜன், நிரோஜன், கானுஜா, லக்ஷனா, தனுஜன், கார்த்திகா, கௌசிகா, கௌசல்யன், கவிந்தன், ஆரபி, பிரசாந், பிரதீப், கீர்த்தனா, லக்ஷன், லக்ஷிகா, லக்ஷனா, லைசன், ஜென்சா, கிருஷன், தர்ஷன், ஜீவதாஸ் ஆகியோரின் பேர்த்தியும், ஷர்மி, டினா, கோதை, சஜீவன், இனிஷா, டனிகா, அஜிந், ஆதியா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2024) திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுருவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(Cs 56997-) N-1

**தகவல்:**
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அலைக்கழிக்கப்படும் ரொஹிங்ய அகதிகள்

## இலங்கை அரசு பாராமுகம்

**கொழும்பு, டிசெ. 23**

**கொழும்பு - மிரிஹானா தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்ட, மியான்மர் நாட்டு அகதிகள் 103 பேரும், மீண்டும் திருகோணமலைக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.**



திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த அவர்களை நீதிமன்றத்தின் உத்தரவுக்கமைய, பொலிஸ் பாதுகாப்புடன் நேற்று முன்தினம் இரு பஸ்களில் மிரிஹானா தடுப்பு முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

கொழும்பு நோக்கி, அழைத்துச் செல்லப்பட்டவர்களை, மிரிஹானா தடுப்பு முகாமிலிருந்து பொறுப்பெடுப்பதற்கு, அனுமதி மறுக்கப்பட்டமையினால், இடைநடுவில் வைத்து அவர்கள், மீண்டும் திருகோணமலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

மிரிஹானா தடுப்பு முகாமில் அவர்களுக்கான போதிய வசதிகள் செய்யப்படவில்லை என்றும், சனி, ஞாயிறு தினங்களாக இருப்பதால், ஏற்பாடுகளை செய்ய முடியாத நிலை இருப்பதாகவும் கூறப்படுகிறது. அதேவேளை மீட்கப்பட்ட நூற்றுக்கும் அதிகமான ரொஹிங்கர்கள் குறித்து முடிவெடுக்க அவகாசம் தேவை என்று அரசாங்கம் கூறியுள்ளது.

இதேவேளை கடலில் 15 நாள்களுக்கு மேலாகப் பயணித்து 103 பேருடன்ரொஹிங்ய அகதிகள்படகு கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவுக் கடற்பகுதியில் கரையொதுங்கிய நிலையில் அவர்கள் மீட்கப்பட்டு திருகோணமலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

## நயினாதீவில் மின்தடை வழமைக்குத் திரும்பியது

யாழ்ப்பாணம், டிசெ. 23

நயினாதீவில் கடந்த 6 ஆம் திகதி முதல் 19 ஆம் திகதி வரை பகல் வேளையில் சுமார் 6.30 மணி நேரம் தடைப்பட்டு வந்த மின்தடை கடந்த வெள்ளிக்கிழமை முதல் வழமைக்குத் திரும்பியுள்ளது. இயந்திரப் பழுது காரணமாகவே மின்தடை ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்காலிகத் தீர்வாக பழுதடைந்த இயந்திரத்தைத் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முன்வைத்த கோரிக்கைக்கமைய யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபன் மேற்கொண்ட முயற்சியில் இயந்திரத்தின் பழுது திருத்தப்பட்டதையடுத்து தற்போது நயினாதீவுக்குத் தடையின்றி மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது. (ச-22,66)

## தொழில்முனைவோருக்கு குத்தகைக்குக் காணிகள்

யாழ்ப்பாணம்,டிசெ.23

சிறிய நடுத்தர தொழில்முயற்சிகளை ஆரம்பிக்கின்ற அல்லது விரிவாக்கம் செய்கின்ற தொழில் முயற்சியாளர்கள் அல்லது முதலீட்டாளர்கள் தமது தொழிலை ஆரம்பிப்பதற்கு காணித்துண்டங்கள் தேவைப்படுமிடத்து, அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் உட்கட்டமைப்பு வசதிகள் விருத்தி செய்யப்பட்ட காணித்துண்டங்களை 30 வருடகால குத்தகையின் அடிப்படையில் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ்.மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச்சபை தெரிவித்துள்ளது.

அதற்கான விண்ணப்பங்களை யாழ். மாவட்ட செயலகத்தில் இயங்கும் யாழ். மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச்சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளமுடியும். மேலும், கைத்தொழில் அபிவிருத்திச்சபையின் இணையத்தளத்திலிருந்தும் (https://idb.gov.lk) பதிவிறக்கம் செய்வதன் மூலமும் விண்ணப்பப்படிவத்தைப் பெறலாம். மேலதிக தகவல்களைப் பெற 021 2222421 எனும் தொலைபேசி ஊடாக தொடர்புகொள்ளலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-33)





# மன்னாரின் களநிலைமை; ம.உ.ஆணைக்குழு ஆராய்வு

மன்னார், டிசெ. 23

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மதியம் மன்னாருக்கு விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தில் சிவில் சமூக செயற்பாட்டாளர்களுடன் விசேட சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணி அபகரிப்பு, படையினர் வசம் காணப்படும் மக்களின் காணிகள் விடுவிக்கப்படாமை, காற்றாலை மற்றும் கனிய மண் அகழ்வினால் மன்னார் தீவில் ஏற்பட்டு வரும் பிரச்சினைகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள் விரிவாகக் கேட்டறிந்து கொண்டனர். மேலும் முள்ளிக்குளம் ஆலயத்துக்கு மக்கள் சென்று வருவதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராய்ந்தனர். அதனைத் தொடர்ந்து மன்னார்த் தீவுப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் காற்றாலை மின்உற்பத்தி நடவடிக்கை மற்றும் கனியமணல் அகழ்வு குறித்தும் நேரடியாக பார்வையிட்டனர். (ச-22,56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 04 . 1972



மறைவு 23 . 11 . 2024

**கடந்த 23.11.2024 ஆம் திகதியன்று இறைவனடி சேர்ந்த**

### அமரர் சுப்பிரமணியம் மணிசேகரன் (சேகர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (21.12.2024) சனிக்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.12.2024) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் தங்கள் குடும்பசகிதம் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து பல வழிகளிலும் உதவி புரிந்த உள்நாட்டு, வெளிநாட்டு உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசியுடாகவும், வலைத்தளங்களினூடாகவும், வீட்டுக்கு வந்து ஆறுதல் கூறிய அன்புள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


**மடத்தடி வீதி,**
**கொடிகாமம்.**

**தகவல் :**
**குடும்பத்ததினர்**

CR 43956) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 02 . 04 . 1942



மறைவு 22 . 12 . 2024

### மரியாம்பிள்ளை தேவசகாயம் (பெயின்ரர் தங்கராசா)

ஊரியவத்தை புலோலி வடக்கு பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மரியாம்பிள்ளை-தேவசகாயம் (பெயின்ரர் தங்கராசா). நேற்று (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை அன்னம்மா ஆகியோரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான கதிரவேல் வள்ளிப்பிள்ளை ஆகியோரின் மருமகனும் காலஞ்சென்ற இன்பமணியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சுமந்தினி மற்றும் சுதர்சினி (ப.தெ.வ.கூட்டுறவுச்சங்கம்-பருத்தித்துறை), சுகிர்தன் (உதவி வலையமைப்பு முகாமையாளர்-யாழ் பல்கலைக்கழகம்) சுயந்தினி (ஆசிரியை-யா/கட்டைக்காடு றோ.க.த.க.பாடசாலை, மருதங்கேணி இ.த.க. பாடசாலை), சுகந்தன் (பொலிஸ் உத்தியோகஸ்தர்-அடம்பன் பொலிஸ் நிலையம்-மன்னார்), ஆகியோரின் அன்புத்தந்தையும். குருபரன் (முன்னாள்- சமுர்த்தி முகாமையாளர்- வாழைச்சேனை), டேவிட் (கிளீனிங்- மேற்பார்வையாளர்-ரூபின்ஸ் தனியார் மருத்துவமனை- நெல்லியடி), ஒஸ்காடொமின்றில்டா (ஆசிரியை-யா/நவாலி ம.வி), துஷ்யந்தன் (அதிபர்-யா/அல்வாய் இ.த.க.பாடசாலை), சிறிவிஜி ஆசிரியை- யா/ அச்சுவேலி ம.கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிரூஷன், சஜீவன், ஹமில்ற்றன், துஷைனிகா, அபிஷனா, யஸ்மிலன், திரேஸ்னியா தேஸ்வின் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் இன்று 23.12.2024 திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பருத்தித்துறை கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

**ஊரியவத்தை**
**புலோலி வடக்கு, பருத்தித்துறை**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 696 4710, 077 167 7269,**
**021 226 0080**

(CR 43957) V-1

## மரண அறிவித்தல்

தோற்றம் 10 . 08 . 1924



மறைவு 22 . 12 . 2024

### இராசையா நவமணி (பேபி)

உரும்பிராயை பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு கருவேலடி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா நவமணி (பேபி) அவர்கள் நேற்று (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லட்சுமணன்-கற்பகம் தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற செல்லத்துரை-மதியாபரணம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசையா (திருநாவுக்கரசர்) அன்பு மனைவியும் இராசேந்திரம் (பனிக்கர் வளவு திருநெல்வேலி), இராசதேவி (கொக்குவில்), வசந்தராசன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் குணரத்தினம் (உரும்பிராய்), சாந்தகுமாரி (இளைப்பாறிய உப அதிபர் பெரியபுலம் மகா வித்தியாலயம்), நந்தினி (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமியாரும் லவன்-கருணிகா, மதீசன், விதுஷா-ஜனகராஜ், அபிரா-நிதர்சன், விதுஷன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.12.2024) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**கருவேலடி லேன்,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 22 . 01 . 1953



மறைவு 22 . 12 . 2024

### பங்கயச்செல்வன் சுசிலாதேவி

நவாலி வடக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், கெந்தளை வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட பங்கையச்செல்வன்- சுசிலாதேவி அவர்கள் நேற்று (22.12.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மருதப்பு-சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் பங்கையச்செல்வனின் (கருமாரி ரேடர்ஸ் உரிமையாளர் கொழும்பு-11) பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதணி, தவமணி, விமலாதேவி, கனகரத்தினம், சொக்கலிங்கம் மற்றும் பராசக்தி, மனோகரன், ரஞ்சினிதேவி, விக்கினேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும் திவாகரின் பாசமிகு தாயாரும் தேனுஜாவின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வத்தளை கரவலப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

**49/39 O கனத்தை வீதி,**
**கெந்தளை,**
**வத்தளை.**

**தகவல்:**
**க.விஜிந்தன்**
**(மருமகன்-குகா)**

(CS 2080) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரியல் கற்கைப் பயிற்சி முகாமில் நூறுக்கும் மேற்பட்டோர் பங்கேற்பு


## கரைநகர், வழுக்கியாறு பிரதேசங்கள் மையப்பொருள்

யாழ்ப்பாணம், டிசெ.23

வடக்கில் நிலத்தடி நீர் பேணலுக்கான ஆளணிப் பயிற்சிப் பட்டறை மூன்று நாள் நடைபெற்ற நிலையில், அதில் காரைநகர், வழுக்கியாறு பிரதேசங்கள் மையப்பொருளாகக் கொள்ளப்பட்டன.

இந்தக் கற்கை முகாமில் வளவாளராக நிலத்தடிநீர் விடயத்தில் புவிச்சரிதவியல் பார்வையுடன் நீர்வள முகாமைத்துவம் செய்வதில் பரந்த அறிவு அனுபவம் பெற்ற நிபுணர் முனைவர் யோகேஷ் ஜடேஜா கலந்துகொண்டார். நீரியல்துறையில் செயற்படுவதற்கான தகைமை பெறுவதற்காக நூறுக்கும் மேற்பட்ட ஆர்வலர்கள் இந்தப் பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டனர்.





வளவாளராகக் கலந்துகொண்ட யோகேஷ் ஜடேஜா வடஇந்திய மாநிலங்களில் காணப்படும் நீர் நெருக்கடி, குடிதண்ணீரின் தரம், விவசாய நீரின் அளவு ஆகியவை தொடர்பாகவும், அதற்குக் காரணமாக உள்ள ஆழ்துளைக் கிணறுகளின் பங்கு தொடர்பாகவும் விவரணங்களை வழங்கினார். அத்துடன் இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் தங்களது ஏசிரி என்ற நிறுவனம் உருவாக்கிய செயற்பாட்டாளர்கள் எவ்வாறு இந்திய மத்திய அரசின் உதவியோடு பல மாநிலங்களில் இயங்குகின்றனர் என்பதையும் விவரித்தார். அதே தன்மை கொண்ட இடைநிலை நீர்வள முகவர்களை வடக்குமாகாணத்தில் உருவாக்குவது தொடர்பில் WASPAR செயற்றிட்டம் பரீட்சிக்க வேண்டும் என்றும் பயற்சிமுகாமில் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

காரைநகர் பிரதேசத்தின் குடிதண்ணீர் தேவைக்கான நன்னீர் கிணற்று வளங்களைப் பேணுவதற்கும், வலிகாமத்தை ஊடறுத்துச் செல்லும் நீரோடையான வழுக்கியாற்றை நன்னிலைக்கு மேம்படுத்தி அந்தப் பிரதேசத்தின் நீர்வளத்தை உறுதி செய்வதற்கும் செயற்றிட்டத்தின் பரீட்சார்த்த முயற்சி பொருத்தமானது என்றும் பயிற்சி முகாமில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-இ)

---

### சீனாவுடன்...

ஜனாதிபதி அநுர, ஜனவரி முற்பகுதியில் பீஜிங் செல்லவுள்ள நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தியா எமது அயல் நாடு. எனவே, அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் தொடர்பில் அந்நாட்டுடன் உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். இவ்வாறு இந்தியாவுடன் நெருங்கிய தொடர்பைப் பேணும் அதே வேளை ஏனைய நாடுகளுடனும் ஒன்றித்துப் பயணிக்க வேண்டும்.

இந்தியாவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் அரசாங்கம் இன்னும் முழுமையாக அறிவிக்கவில்லை. ஒரு சில விடயங்கள் மட்டுமே அறிவிக்கப்பட்டுள்ளன. எனவே, ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் நாடாளுமன்றத்துக்கு முழுமையாகத் தெளிவுபடுத்தவேண்டும். எட்கா ஒப்பந்தத்துக்கு தேசிய மக்கள் சக்தியே கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்தது. அது தொடர்பான பேச்சுகளைத் தொடர்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. எனவே, எட்கா தொடர்பிலான அநுர அரசாங்கத்தின் அணுகுமுறை என்ன? இது பற்றியும் தெளிவுபடுத்த வேண்டும். அதேவேளை, சர்வதேசத்துடன் இரகசிய ஒப்பந்தங்கள் தேவையில்லை என தேசிய மக்கள் சக்தி அறிவித்திருந்தது. ஆகவே அடுத்த மாதம் சீனா செல்லவுள்ள ஜனாதிபதி அங்கு பேசவுள்ள விடயங்களையும் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும் - என்றார். (அ-எ-44)

### இலங்கை...

வித்துள்ளதாவது:-

இலங்கைக்கும் இந்தியாவுக்கிடையில் பாலம் அமைக்கும் யோசனையை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம். இந்தியா என்ற நாடு உருவாகும்போது ஏன் இலங்கை இணைக்கப்படவில்லை? இந்தியாவை பிரிட்டன் ஆண்டபோது இந்தியா ஊடாக அல்லாமல் இலங்கையை தனியாக ஆண்டது ஏன்? இலங்கையென்பது தனிநாடாகவே இருந்துவருகின்றது. கடலால் சூழப்பட்டுள்ள எமது நாட்டுக்கென தேச எல்லை உள்ளது. நாம் இந்தியாவின் ஒரு பகுதியாக மாறி இருந்தால் மகாபாரதத்தின் ஒரு பாகமாகவே எமது நாடு இருந்திருக்கும். தனி நாட்டுக்குரிய கட்டமைப்பை இயற்கை எமக்குப் பரிசாக வழங்கியுள்ளது. எனவே பாலம் அமைத்து இயற்கை வழங்கிய பரிசை நாசமாக்கிவிடக்கூடாது.

எமது நாட்டில் போலியோ ஒழிக்கப்பட்டுள்ளது. மலேரியா இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லை. அங்கு சமூகப்பிரச்சினைகளும் உள்ளன. எனவே, புதிய பிரச்சினைகள் உருவாக இடமளிக்கக்கூடாது. தேசியப் பாதுகாப்பு, சுகாதாரம், சமூகம் உட்படப் பல விடயங்களுக்கு இந்த பாலம் அமைக்கும் யோசனை ஏற்புடையது அல்ல - என்றார். (அ-எ-44)

### நிறைவேற்று...

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பான யோசனை புதிய அரசியலமைப்பில் உள்ளடக்கப்படும் என்று தெரிவித்துள்ள அவர், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது தொடர்பாக எமது தேர்தல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளோம் என்றும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகம் ஒன்றுக்குக் கருத்துத் தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சர், நாங்கள் இன மற்றும் மதவாதத்துக்கு எதிராகச் செயற்படுகின்றோம். நாம் அவ்வாறு செயற்படுவோம் என்ற நம்பிக்கை மக்களுக்கும் உள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

தேர்தல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவற்றை நாங்கள் நிறைவேற்றுவோம் என்று தெரிவித்துள்ள அவர், பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவர வேண்டும், மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்று மக்கள் இப்போது கோருகின்றமை தெளிவான விடயம் என்றும் தெரிவித்துள்ளார். (அ-எ-ச-இ)

### மயங்கி...

4 நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இவர் நேற்று வீட்டில் மயங்கி வீழ்ந்துள்ளார். அவரை உறவினர்கள் மருத்துவமனைக்குக் கொண்டுசென்றபோதும், அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று மருத்துவர்கள் அறிக்கையிட்டுள்ளனர்.

இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-எ-26)

### வீதியை...

பதாகைகளை ஏந்தியவாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த வீதி கடந்த 30 ஆண்டுகளாகத் திருத்தப்படாமல் உள்ளது என்றும், அந்த வீதியைத் திருத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் வலியுறுத்தினர். (அ-எ-26-20)

### தேர்தல்...

தொடர் ஜனவரி 7ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஜனவரி 10 ஆம் திகதிவரை சபை அமர்வுகள் இடம்பெறும்.

ஜனவரி 7 ஆம் திகதி துறைசார் அமைச்சரால் இந்தச் சட்டவரைவு முன்வைக்கப்படவுள்ளது என்றும், அதில் ஏதேனும் சிக்கல் ஏற்பட்டாலும் 10 ஆம் திகதிக்குள் அது சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரியவருகின்றது.

உள்ளாட்சி சபைத் தேர்தலுக்காக ஏற்கனவே கோரப்பட்டிருந்த வேட்பு மனுக்களை நிராகரித்தது, புதிதாக வேட்பு மனுக்களை கோரும் வகையிலேயே சட்டத் திருத்தம் வரவுள்ளது. உள்ளாட்சி சபைத் தேர்தல் மார்ச் இறுதியில் அல்லது ஜனவரி முதல் வாரத்தில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-எ-44)

### உள்ளூராட்சித்...

திட்டம் மீதான இறுதி வாக்கெடுப்பு எதிர்வரும் மார்ச் மாதம் 21ஆம் திகதி நடத்தப்படக்கூடும் என்று தெரிகின்றது. அதனால் தேர்தலுக்கு மார்ச் மாதம் 22ஆம் திகதியை விடவும் 29ஆம் திகதியே பொருத்தமானதாக இருக்கும் என்று கருதப்படுகின்றது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் திருத்தச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டபின்னர், தேர்தலுக்கான அறிவித்தலை தேர்தல்கள் ஆணைக் குழு வெளியிடவுள்ளது. (அ-எ-44)

### தொடர்...

அது தொடர்பாக இரகசிய அறிக்கை ஒன்று புலனாய்வுப் பிரிவினரால் பதில் பொலிஸ்மா அதிபரிடம் வழங்கப்பட்டுள்ளது என்றும் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையிலும், வெளிநாடுகளிலும் உள்ள பாதாள உலகக் குழுக்களால் இந்தக் கொலைத் திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன என்றும், போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் அதிகாரம் தொடர்பான கருத்து மோதல்களாலேயே இந்தக் கொலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் கூறப்படுகின்றது.

பாதாள உலகக் குழுக்களால் நடத்தப்படும் கொலைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிக்க பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரிய, சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்களுக்கு அண்மையில் அறிவித்துள்ளார் என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-எ-இ)

### புலிகளின்...

முன்னர் வே.பிரபாகரனின் பிறந்தநாள் அன்று சமூகவலைத்தளத்தில் அவரது படத்துடன் வாழ்த்துப் பதிவிடப்பட்டிருந்தது. அந்தப் பதிவுக்குக் கீழ் பலரும் வாழ்த்துகள் தெரிவித்திருந்தனர். அவ்வாறு வாழ்த்துத் தெரிவித்த வவுனியா, பண்டாரிக்குளத்தைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தர் ஒருவரிடமே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் வவுனியா அலுவலகத்தில் வைத்து வாக்குமூலம் பதிவு செய்த பின்னர் விடுவித்துள்ளனர்.

இரு ஆண்டுகளுக்கு முன்னர் சமூகவலைத்தளத்தில் பதிவிட்ட பதிவுக்காகத் தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை மக்களிடையே அச்சத்தையும், விசனத்தையும் ஏற்படுத்தியுள்ளது. (அ-எ-110-18)

### கிணற்றில்...

கண்டிவீதியைச் சேர்ந்த சண்முகராசா லீலாவதி (வயது-72) என்பவரே உயிரிழந்தவராவார். கிணற்றில் நீர் அள்ளும்போது அவர் தவறிக் கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொடிகாமம் பிரதேச திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சி.தவமலர் இறப்பு விசாரணைகளை முன்னெடுத்தார். சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரியின் உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (அ-எ-159)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியா தெற்கு வலயத்தில் ஆசிரியர்கள் பற்றாக்குறை

வவுனியா, டிசெ. 23

வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இது தொடர்பில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வவுனியா தெற்கு வலய செயலாளர் கிருஸ்ணகோபால் வசந்தரூபன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில்,

வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் தற்போதும் பல பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனை ஆசிரியர் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்களின் போது வடக்கு மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதுடன் 2 விஞ்ஞான பாட ஆசிரியர்களும் பற்றாக்குறையாக உள்ளது. அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப பாடத்திற்கு 7 ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது. பாடத்துறைகளில் நிலவும் இவ்வாறான ஆசிரியர் பற்றாக்குறை மாணவர்களின் கல்வியில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று சுட்டிக்காட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச-18)

## யாழில் களைகட்டிய நத்தார் பண்டிகை

### சவுக்கு மர விற்பனை

யாழ்ப்பாணம், டிசெ.23

நத்தார் பண்டிகையை முன்னிட்டு யாழ்.நகர்ப் பகுதிகளில் நத்தார் அலங்காரப் பொருள்கள் விற்பனை களைகட்டியுள்ளது. யாழ்ப்பாணம் சுண்டிக்குழி பகுதியில் 200 ரூபாய் முதல் 500 ரூபா வரை சவுக்கு மரத் தடியொன்று விற்பனை செய்யப்படுகின்றது. இதேவேளை பாலன் குடில்கள் தயாரிக்கப்பட்டு 900 ரூபா முதல் 4000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் பண்டிகைக் காலத்துக்கான பட்டாசுகள் அமோகமாக விற்பனை செய்யப்படுவதுடன் பண்டிகைக்கான கேக் உற்பத்திப் பொருள்களையும் மக்கள் வாங்கிச் செல்வதனை அவதானிக்க முடிகிறது. இதேவேளை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகின்ற பொழுது இவ்வருடம் ஒப்பீட்டளவில் பொதுமக்கள் நத்தார் பண்டிகைப் பொருள்களை கொள்வனவு செய்கின்ற நிலை குறைவடைந்துள்ளதாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர். (ச-125)

## கசிப்புடன் இருவர் கைது

யாழ்ப்பாணம்,டிசெ.23

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் நேற்று யாழ்ப்பாணத்தில் கசிப்புடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இரண்டு சந்தேகநபர்கள் கோப்பாய் மத்தி பகுதியில் நீண்டகாலமாக கசிப்புக் காய்ச்சி விற்பனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தமை தெரியவந்துள்ளது. சுற்றிவளைப்பு நடவடிக்கையில் 10 லீற்றர் கசிப்பு அவர் களிடம் மீட்கப்பட்டது. சந்தேகநபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ச-27)


## அந்தியேட்டியும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையும்

கடந்த 27.11.2024 அன்று சிவபதம் எய்திய

**அமரர் சின்னத்துரை செல்வராஜ்**



மலர்வு 23.08.1971

உதிர்வு 27.11.2024

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் எதிர்வரும் (27.12.2024) வெள்ளிக்கிழமை கொழும்பு முகத்துவாரம் புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக் கிருத்தியக்கிரியைகள் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும்.

எதிர்வரும் (29.12.2024) ஞாயிற்றுக்கிழமை பம்பலப்பிட்டி தொடர்மாடி மண்டபத்தில் (Community Centre) நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். **(உற்றார், உறவினர், நண்பர்கள் இதனை தங்கள் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதரவும்)**

**குடும்பத்தினர்**

**071 829 7207**

(cr.56986) (N-1)


## ஆபிரிக்க நத்தைகளை ஒழிக்காவிடின் ஆபத்து

யாழ்ப்பாணம்,டிசெ.23

ஆபிரிக்கப் பெரும் நத்தைகளின் பெருக்கம் அதிகமாகி வரும் நிலையில் அவற்றைக் கட்டுப்படுத்தத் தவறின் விரைவில் பேராபத்துகளை விளைவிப்பவையாக அவை அமையும் என தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட பெரும் நத்தைகள் ஏற்கனவே இங்கு அவதானிக்கப்பட்ட போதும் இப்போது இவற்றின் பெருக்கம் பல்கிப் பெருகி இப்போது ஓர் ஆக்கிரமிப்பு இனமாக உருவெடுத்துள்ளது.

இவை பயிர் பச்சைகளையெல்லாம் தின்றுதீர்க்கும் வல்லமை கொண்டதோடு உள்ளூர் உயிரினங்களுக்கு அச்சுறுத்தலாக நோய்களைப் பரப்பும் காவிகளாகவும் செயற்படுகின்றன.

இவற்றை இப்போதே கட்டுப்படுத்தத்தவறின் பொருளாதாரச் சீரழிவுக்கும், சுற்றுச்சூழல் சீர்கேட்டுக்கும் ஆளாகி விரைவில் பேராபத்துகளை சந்திக்கநேரும் என்றும் குறிப்பிட்டுள்ளார். (ச-27,125)




## மரண அறிவித்தல்



தோற்றம் 13 . 05 . 1944

மறைவு 20 . 12 . 2024

**சண்முகம் செல்லப்பா**

தச்சன் தோப்பு கைதடியைப் பிறப்பிடமாகவும், நாயன்மார் வீதி, நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் செல்லப்பா கடந்த 20.12.2024 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் சண்முகம் - பாக்கியம் தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்றவர்களான முத்துலிங்கம் - அன்னபூரணம் தம்பதியரின் மருமகனும், செல்வராணியின் (ராணி) அன்புக் கணவரும், கனகராஜா, காலஞ்சென்றவர்களான கந்தசாமி, ஆனந்தராஜா, தங்கராசா மற்றும் முத்துமலர், தங்கமலர் ஆகியோரின் சகோதரனும், கௌசல்ஜா (பிரான்ஸ்), காயத்திரி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர், பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்), கபில்ராஜ் (J.K.R. ஜுவல்லறி, சாவகச்சேரி), சரண்ராஜ் ஆகியோரின் தந்தையும், புவிதாசன் (பிரான்ஸ்), கௌதமன் (தொழில் வழிகாட்டல் ஆலோசகர்- யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்), அபிலாஷா ஆகியோரின் மாமனாரும், அக்ஷயன், ஆருத்ரா, ஆத்மிகா, ஹஸ்மிகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.12.2024) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**40 /9, நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.**

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு: - 077 418 8484
077 138 7424

(Cs 56996) N-1


நெடுந்தீவில்

## வேலியே பயிரை மேய்ந்த கதை

யாழ்ப்பாணம், டிசெ.23

சட்டவிரோதமாக ஆடுகளை இறைச்சியாக்கி நெடுந்தீவிலிருந்து கொண்டு சென்ற குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தீவக சிவில் சமூகத்தின் முயற்சியால் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

விடுமுறையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் பொதியை புங்குடுதீவு குறிகாட்டுவான் இறங்குதுறையில் வைத்து சோதனையிட்டபோது அதில் இறைச்சி காணப்பட்டதையடுத்து விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

எனினும் அவரை விடுவிக்க பொலிஸார் முயன்ற நிலையில் அங்கிருந்த தீவக சிவில் சமூகத்தின் செயற்பாட்டாளர்களின் இடைவிடாத முயற்சியால் குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

இரு தினங்களுக்கு முன்னர் நெடுந்தீவு பிரதேசத்தில் இரு ஆடுகள் காணாமல் போயிருந்த நிலையில் உரிமையாளர் நெடுந்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த போதிலும் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் அதன்போது அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இந்தநிலையில் ஊர்காவற்றுறை தலைமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி விதான பத்திரண தலைமையிலான பொலிஸ் குழுவினரால் குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ச-10)

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 செய்தி: news@uthayan.com விளம்பரம்:advt@uthayan.com

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org